UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - DECEMBER 2018
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2018 டிசெம்பர்

**TAMIL I / தமிழ் I - (TG I)**

**தமிழ் மொழி வரலாறும் இலக்கண மரபுகளும்**

இவ்வினாத்தாளில் எல்லாமாக 08 வினாக்கள் உள்ளன

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **இரு** வினாக்களையேனும் தெரிந்து

எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

**(மூன்று மணித்தியாலம்)**

---

## பகுதி 1

1. திராவிட மொழிக்குடும்பம் பற்றி விளக்கி, தமிழ் மொழியின் தொல் வரலாற்றை அறிவதில் திராவிட மொழிக் குடும்பம் பற்றிய ஆய்வின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துக.

2. பிறமொழிக் கலப்பினால் தமிழ்மொழியின் ஒலியமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை - புதிய ஒலிகள் புகுதல், ஒலியன் பரம்பலில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பவற்றை - உதாரணம் தந்து விளக்குக

3. தொல்காப்பியர் காலத்திலிருந்து இக்காலம் வரை தமிழில் மூவிடப்பெயர்கள் எவ்வாறு மாற்றமடைந்து வந்துள்ளன என்பதை ஆராய்க.

4. கலைச்சொல்லாக்கம் என்றால் என்ன? தமிழில் கலைச்சொல்லாக்க வரலாற்றினைச் சுருக்கமாக விளக்குக.

ம.ப.பா

## பகுதி 11

5. தமிழில் தோன்றிய இலக்கண நூல்களை வகைப்படுத்தி, தமிழ் இலக்கணமரபை உருவாக்கியதில் அவற்றின் முக்கியத்துவத்தை விளக்குக.

6. எழுத்திலக்கணம் என்றால் என்ன? தமிழ் இலக்கண நூல்கள் எழுத்திலக்கணத்தை எவ்வாறு வகைப்படுத்தி விளக்குகின்றன என்பதை ஆராய்க.

7. தமிழ் இலக்கண நூல்கள் சொற்களை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என வகைப்படுத்துவதன் அடிப்படைகளைத் தெளிவுபடுத்தி. தற்காலத் தமிழைப் பொறுத்தவரை இவ்வகைப்பாட்டின் பொருத்தப்பாடு பற்றிக் கருத்துரை வளங்குக.

8. தற்கால இலக்கண ஆசிரியர்கள் வினைச் சொற்களை வல்வினை, மெல்வினை என்றும் முதல்வினை, துணைவினை என்றும் வகைப்படுத்துவதன் அடிப்படைகளைத் தெளிவுபடுத்துக.

UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දූරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - DECEMBER 2018
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2018 டிசெம்பர்

## TAMIL - II / தமிழ் - II (TG - II)

## குறிப்பிட்ட பாட நூல்கள்

(மூன்று மணித்தியாலம்)

இவ்வினாத்தாளில் எல்லாமாக 08 வினாக்கள் உள்ளன

**முதலாம்** பகுதியிலுள்ள வினாவுக்கும் **இரண்டாம்** பகுதியிலுள்ள

எவையேனும் **நான்கு** வினாக்களுக்குமாக

எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

### பகுதி I

01. மேல்வரும் பாடல்களின் சிறப்பினை விளக்குக.

(அ) கோழிலை வாழைக் கோள்முதிர் பெருங்குலைஊழுறு தீங்கனி,
உண்ணுநர்த் தடுத்த
சாரற் பலவின் சுளையொடு, ஊழ்படு
பாறை நெடுஞ்சுனை, விளைந்த தேறல்
அறியாது உண்ட கடுவன் அயலது
கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது,

வெறுத்த ஏஎர், வேய்புரை பணைத் தோள்,
நிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்டு
இவளும், இனையள் ஆயின், தந்தை
அருங்கடிக் காவலர் சோர்பதன் ஒற்றிக்
கங்குல் வருதலும் உரியை; பைம்புதல்
வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன;
நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே!

(ஆ) வழிபடு வோரை வல்லறி தீயே!
பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே;
நீமெய் கண்ட தீமை காணின்,
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி;
வந்து, அடி பொருந்தி, முந்தை நிற்பின்,
தண்டமும் தணிதி, நீ பண்டையிற் பெரிதே;
அமிழ்துஅட்டு ஆனாக் கமழ்குய் அடிசில்
வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை
மகளிர் மலைத்தல் அல்லது, மள்ளர்
மலைத்தல் போகிய, சிலைத்தார் மார்ப!
செய்து இரங்காவினைச், சேண்விளங் கும்புகழ்,
நெய்தருங் கானல் நெடியோய்!
எய்த வந்தனம்யாம்; ஏத்துகம் பலவே!

## பகுதி II

02. தோழியின் மதிநுட்பம் அகநானூற்றுப் பாடல்களினூடாகப் புலப்படுமாற்றை விளக்குக.

03. ‘புறநானூற்றுப் பாடல்கள் பெரும்பாலும் மன்னர் புகழ் கூறுபவையே’ - இக்கூற்றின் பொருத்தப்பாட்டை உதாரணங்களுடன் ஆராய்க.

04. திருக்குறள் தமிழ்ச் சூழலில் ‘நல்லரசு’ ஒன்று எவ்வாறு இருக்க வேண்டுமென வரையறை செய்யுமாற்றை விபரிக்குக.

ம.ப.பா.

05. “ஆண்டாள் பாசுரங்களினூடாகப் பண்டைக் காலத்துத் தமிழ்ப்பண்பாட்டினை அடையாளம் காணமுடியும்” – அலசுக.

06. சேக்கிழார் கண்ணப்பநாயனார் புராணத்தினூடாகத் தமது இறை பக்தியை வெளிப்படுத்துமாற்றை விபரிக்குக.

07. பாரதியின் சுயசரிதையில் பெரும்பாலும் கழிவிரக்க உணர்வு வெளிப்படுமாற்றை விபரிக்குக.

அல்லது

“பட்டப்பகலில் பாவலர்க்குத் தோன்றுவதோர் நெட்டைக் கனவே” பாரதியின் குயில் பாட்டு. அலசுக.

08. இலங்கையர்கோன் படைத்த பாத்திரங்கள் பெரும்பாலும் உணர்வு வயப்பட்டனவே’ – வெள்ளிப்பாதரசம் சிறுகதைத் தொகுப்பை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை விளக்குக.

UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - DECEMBER 2018
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி) - 2018 டிசெம்பர்

**TAMIL - III / தமிழ் - III (TG III)**

## சோழர்காலம் முதல் நவீனகாலம் வரையிலான தமிழ் இலக்கிய வரலாறும் இலக்கியக் கோட்பாடுகளும்

இவ்வினாப் பத்திரத்தில் எல்லாமாகப் **பத்து** (10) வினாக்கள் உள்ளன

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **இரு** வினாக்களையேனும் தெரிந்து

எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

**(நேரம் : மூன்று மணித்தியாலம்)**

---

பகுதி 1

1. சோழர்காலம் காவியங்களின் உற்பத்திக்காலமாக விளங்குமாற்றினைத் தெளிவுறுத்துக.

2. விஜயநகர காலத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியினை மதிப்பிடுக.

3. தமிழ் இலக்கிய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் முக்கிய அம்சங்களைப் பரிசீலிக்குக.

4. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை வளர்ச்சி பற்றி ஆராய்க.

5. பின்வருவோருள் யாரேனும் ஒருவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.

   (அ) ஒட்டக்கூத்தர்

   (ஆ) அருணகிரிநாதர்

   (இ) கல்கி

   (ஈ) புதுமைப்பித்தன்

பகுதி II

6. இலக்கிய வளர்ச்சிக்கு இலக்கியத் திறனாய்வாளனின் ஆக்கபூர்வமான பங்களிப்புப் பற்றித் தெளிவுபடுத்துக.

7. இலக்கிய வரலாற்றில் திறனாய்வு பெறும் முக்கியத்துவம் பற்றி மதிப்பிடுக.

8. இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகளில் உணர்ச்சிக் கொள்கையையும், அழகியற் கொள்கையையும் ஒப்பிட்டு விளக்குக.

9. நீர் அண்மையில் வாசித்த நாவல் ஒன்றினைத் திறனாய்வு நோக்கில் மதிப்பிடுக.

10. பின்வரும் கவிதையைத் திறனாய்வு செய்க.

சுட்டும்விழிச் சுடர்தான் - கண்ணம்மா!
சூரிய சந்திரரோ?
வட்டக் கரியவிழி - கண்ணம்மா!
வானக் கருமைகொல்லோ?
பட்டுக் கருநீலப் - புடவை
பதித்த நல்வயிரம்
நட்ட நடுநிசியில் - தெரியும்
நட்சத்தி ரங்களடி!

ம.ப.பா.

சோலைமல ரொளியோ - உனது
சுந்தரப் புன்னகைதானோ?
நீலக்கட லலையே - உனது
நெஞ்சி லலைகளடி!
கோலக்குயி லோசை - உனது
குரலி னிமையடீ!
வாலைக்குமரியடீ - கண்ணம்மா!
மருவக் காதல் கொண்டேன்.

சாத்திரம் பேசுகிறாய் - கண்ணம்மா!
சாத்திர மேதுக்கடீ!
ஆத்திரம் கொண்டவர்க்கே - கண்ணம்மா!
சாத்திர முண்டோடீ?
மூத்தவர் சம்மதியில் - வதுவை
முறைகள் பின்புசெய்வோம்
காத்திருப் பேனோடீ? - இதுபார்
கன்னத்து முத்தமொன்று!